# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**Under Section 173 BNSS** (handwritten initials)
முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8120341

1. District : விழுப்புரம் மாவட்டம் | PS: ஊ.த.க பிரிவு காவல்நிலையம் | Year: 2024 ஆண்டு | FIR No.: 13 மு.த.அ. எண் | Date: 24.10.2024 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act — Sections பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act சட்டம்: 1988 (Amended) Act - 2018 — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: 106 BNSS
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 23.10.2024 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 14.00 | Time to : நேரம் வரை 19.00
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2024 | Time : நேரம் 12.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம் 12.45

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ..... எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 70 km வடகிழக்கில்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. ராணி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர். கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திருமதி. வ. ஜெகதீஸ்வரி, உதவியாளர், மரக்காணம் சார்பதிவாளர் (பொறுப்பு) 2. இளநிலை உதவியாளர் திருமதி த. தாட்சாயினி 3. அலுவலக உதவியாளர் திரு. அ. நடராஜன் 4. ஆவண எழுத்தர் திரு. ஆனந்தன் த/பெ ராமசாமி, மரக்காணம் 5) புரோக்கர்கள் சரவணன் 6) சிவசரணம் 7) தனிநபர் மோகன் த/பெ மகாலிங்கம் வில்லியனூர் 8) ஜோதி த/பெ ராமதாஸ் வில்லிவாக்கம், சென்னை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது .

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 24/10/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 24/10/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.10.2024

G. அழகேசன்
Name: பெயர் காவல் துணை கண்காணிப்பாளர்
Rank: நிலை ....................No. எண் ..........
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு விழுப்புரம் .

**பணிந்து அனுப்பப்படுகிறது.** அம்மையீர், நான் இன்று 24.10.2024-ம் தேதி 12.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் G.ராணி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 24.10.2024-ம் தேதி 12.45 மணிக்கு விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 13/2024/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர்,G.ராணி,மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம்,கடலூர்.பெறுநர்,காவல் துணை கண்காணிப்பாளர்அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்.அ/565/2024, நாள் 24.10.2024. அய்யா, பொருள் திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகம் - 23.10.2024 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக:- பார்வை திடீர் ஆய்வு மகஜர் நாள்: 23.10.2024. 23.10.2024-ஆம் தேதி திருமதி.G.ராணி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் ஆகிய நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மூலமும், புரோக்கர்கள் மூலமும் இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் விழுப்புரம் மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கு பணியில் இருந்த காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.அழகேசன் மற்றும் அவரது காவல் குழுவினருடன் மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 14.00 மணியளவில் மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தினுள் சென்று அங்கிருந்தவர்களிடமும் சார்பதிவாளர்(பொ) அவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, பின்னர் விசாரித்து தெரிந்த 1) திருமதி.வ.ஜெகதீஸ்வரி, உதவியாளர், மரக்காணம் சார்பதிவாளர்(பொ) அவர்கள் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார்.2)அவருக்கு இடது புறத்தில் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திரு.ச.மணிகண்டன் அமர்ந்திருந்தார். 3) அவருக்கு வலது புறத்தில் வடக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அலுவலக உதவியாளர் திரு.அ.நடராஜன் அமர்ந்திருந்தார். 4)அவருக்கு எதிரில் உள்ள கணினி அறையில் இளநிலை உதவியாளர் திருமதி.த.தாட்சாயினி மேற்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியிலும் 5)அவருக்கு வலது புறத்தில் மேற்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் கேமரா ஆபரேட்டர் திரு.ப.சுதாகர் அமர்ந்திருந்தார். சார்பதிவாளர் இருக்கைக்கு நேர் எதிரே ஆவண எழுத்தர் 6) திரு.ஆனந்தன் த.பெ ராமசாமி (உரிமம் எண்-A42018TDM/1984) 12/A தர்மாபுரி தெரு, மரக்காணம். புரோக்கர்கள் 7)திரு.சரவணன் த.பெ கந்தசாமி, ஆலப்பாக்கம், 8)திரு.சிவஞானம் த.பெ குணசேகரன், காளியாங்குப்பம், அனுமந்தபுரம். தனி நபர்களான

9)திரு. ஜெயபிரகாஷ்ஹரிராம், ஊரப்பாக்கம், சென்னை. 10)மணிகண்டன் த.பெ தேவராஜ், பந்தாடு, மரக்காணம் 11) திரு.மோகன் த/பெ மகாலிங்கம், உருவையாறு சாலை, வில்லியனூர், பாண்டி. 12)திரு.தமிழரசன் த.பெ ஆறுமுகம், தென்களவர், திண்டிவனம். 13)திரு.ராஜி த/பெ ராமதாஸ் திருநகர், வில்லிவாக்கம், சென்னை. 14)திரு.ராம் த/பெ ஜெகதீசன், ராஜபாய் நகர், சென்னை. 15)திருமதி. பவளக்கொடி க/பெ ராம், ராஜபாய் நகர், சென்னை. ஆகியோர் நின்றிருந்தனர். அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவரவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ்கண்டவகையில் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டது. திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்: 1)திருமதி.வ.ஜெகதீஸ்வரி, உதவியாளர், மரக்காணம் சார்பதிவாளர்(பொ) அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் பணம் ஏதும் குறிப்பிடாமலும் கையொப்பம் இடாமலும் அவரது பெயருக்கு நேராக காலியாக இருந்தது. 2)திருமதி.த.தாட்சாயினி இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ஏதும் இல்லை. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் 1000 ரூபாய் உள்ளதாக குறிப்பிடப்பட்டு உள்ளது. இது முன்னுக்குபின் முரணாக உள்ளது. 3)திரு.மணிகண்டன், டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் 200 ரூபாய் உள்ளதாக குறிப்பிடப்பட்டு உள்ளது. இது முன்னுக்குபின் முரணாக உள்ளது. 4) கேமரா ஆபரேட்டர் திரு.சுதாகர் என்பவரை சோதனை செய்தபோது சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் பணம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. 5)அலுவலக உதவியாளர் திரு.நடராஜன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.2,000/- (500X4) இருந்தது. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் பணம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 6)திரு.மோகன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.4,70,000/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க ரூபாய்.3,53,500/- தக்க முகாந்திரமும் தெரிவித்ததால் (ஆவண எண்கள் 4904/2024 மற்றும் 4894/2024) ரூபாய்.3,53,500/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ரூபாய்.1,16,500/-க்கு (500X 233) அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 7)ஆவண எழுத்தர் திரு.ஆனந்தன் த.பெ ராமசாமி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.2,000/- (500X4)இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 8)ஜெயபிரகாஷ்ஹரிராம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.50,000/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க ரூபாய்.50,000/- தக்க முகாந்திரமும் தெரிவித்ததால் (ஆவண எண்கள் 4904/2024) ரூபாய்.50,000/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 9)திரு.ராம் என்பவரை சோதனை செய்தபோதுஅவரிடம் ரூபாய்.6000/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் தக்க முகாந்திரமும்

தெரிவித்ததால் மேற்படி தொகை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 10)திருமதி.பவளக்கோடி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,48,500/ இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் மேற்படி பணம் குறித்து தக்க முகாந்திரம் (கடன்பத்திரம் -9948436527/2024) தெரிவித்ததால் மேற்படி தொகை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 11) திரு.தமிழரசன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.19,200/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் மேற்படி பணம் குறித்து தக்க முகாந்திரம் தெரிவித்ததால் மேற்படி தொகை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 12)திரு.ராஜி என்பவரை சோதனை செய்தபோதுஅவரிடம் ரூபாய்.17,500/-(500X 35)இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 13)புரோக்கர் திரு.சிவஞானம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.2,000/-(200X9,100X2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.14) திரு.மணிகண்டன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.11,700/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் மேற்படி பணம் குறித்து தக்க முகாந்திரம் தெரிவித்ததால் மேற்படி தொகை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 15) புரோக்கர் திரு.சரவணன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை. அதன் பின்பு, மேலும் மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தினை உட்புறத்தினை சோதனை செய்ததில் கைப்பற்றக்கூடிய பொருளோ, பணமோ ஏதும் இல்லை. மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தினைசோதனை செய்யப்பட்டதில் கைப்பற்றப்பட்ட பணமானது,

| வ.எண் | கைப்பற்றப்பட்ட பணம் |
|---|---|
| 1) | ரூ.2,000/- |
| 2) | ரூ.1,16,500/- |
| 3) | ரூ.2,000/- |
| 4) | ரூ.17,500/- |
| 5) | ரூ.2,000/- |
| ஆக மொத்தம் | **ரூ.1,40,000/-** |

இந்த திடீராய்வின்போது மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான**ரூ.1,40,000/-**(ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஆனது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு மரக்காணம் சார்பதிவாளர் அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான G கணக்குப் பதிவேடு, மற்றும் H கணக்குப் பதிவேடு, ஆகியவற்றை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் விசாரணைக்காக மரக்காணம் சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2024, தனி நபர் ரொக்க பதிவேடு-2024, மற்றும் இயக்கப்பதிவேடு-2024 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.பிறகு அலுவலகத்தில் இருந்த மரக்காணம் சார்பதிவாளர், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு தொடர்பாக பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்க வேண்டிய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தின் விபரம் அலுவலகத்தில்

வைக்கப்படவில்லை. மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தின் இருந்தவர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் பெண் காவலர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல உதவி ஆய்வாளர் திரு.அ.சக்கரபாணி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 23.10.2024-ம் தேதி சுமார் 14.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.10.2024-ம் தேதி சுமார் 19.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீராய்வு மகசரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான மொத்தம் **ரூ.1,40,000/-** (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) கைப்பற்றப்பட்டது சம்மந்தமாக 1)திருமதி.வ.ஜெகதீஸ்வரி, உதவியாளர், மரக்காணம் சார்பதிவாளர்(பொ) 2)இளநிலை உதவியாளர் திருமதி.த.தாட்சாயினி 3)அலுவலக உதவியாளர் திரு.அ.நடராஜன் 4)ஆவண எழுத்தர் திரு.ஆனந்தன் த.பெ ராமசாமி (உரிமம் எண்-A42018TDM/1984) 12/A தர்மாபுரி தெரு, மரக்காணம். புரோக்கர்கள் 5)திரு.சரவணன் த.பெ கந்தசாமி, ஆலப்பாக்கம், 6)திரு.சிவஞானம் த.பெ குணசேகரன், காளியாங்குப்பம், அனுமந்தபுரம். தனி நபர்கள் 7) திரு.மோகன் த/பெ மகாலிங்கம், உருவையாரு சாலை, வில்லியனூர், பாண்டிச்சேரி 8)திரு.ராஜி த/பெ ராமதாஸ் திருநகர், வில்லிவாக்கம், சென்னை. ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, sd(xxxx) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர். இணைப்பு:1.திடீர் ஆய்வு மகஜர் நாள். 23.10.2024. 2.ரொக்கம் ரூபாய் 1,40,000/-. 3. 5-நபர்களின் வாக்குமூலங்கள்.4.மரக்காணம் சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2024 5. தனி நபர் ரொக்கஇருப்பு பதிவேடு-2024 மற்றும் இயக்கப்பதிவேடு-2024.

Madam,

Received the above computer typed complaint on 24.10.2024 at about 12.00 hrs. Hence, I registered a case in Villupuram Vigilance and Anti-Corruption Cr.No.13/2024/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS at 12.45 hrs today on 24.10.2024.

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

24/10/2024

(G.Alagesan)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.